முருகப்பெருமான் துணை

**மகான் மூர்த்தி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.03.2023**, செவ்வாய்கிழமை

1. ஞானபண்டிதன் சக்தியாக வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞானயுகம் படைக்க வேண்டி
ஞாலமதில் மக்களை நோக்கி
2. நோக்கியே ஜீவ தயவு காட்டி
ஞானமருளும் ஞான தேசிகனே
ஆக்கமுடன் உன்பெருமை கூறி
அருளுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை சுபகிருது சேல் திங்கள்
அறிவிக்க முன்னான்கீர் திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 14 ம் நாள், 28.03.2023, செவ்வாய்கிழமை)
ஆசிதந்து மூர்த்தி நாயனாரும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
4. நலம்தரும் மாதவ ராஜன்
ஞானிகளின் சக்தி கூட்டி
பலம்பெற மக்களை நோக்கி
பரோபகாரம் எனும் வரமதை
5. வரமதை வேதமாக அருளி
வாஞ்சைபட மக்கள் நடக்க
அறமுடன் சேவை ஆற்றுகின்ற
அரங்கமகானை குருவாக உலகோர்
6. உலகோர் ஏற்று வருக
உயர்வான வழிகள் பிறக்கும்
உலகமெல்லாம் அரங்கன் தருமம்
உயிர்பாதுகாப்பாக வலம்வர
7. வருகவே வையகம் தானும்
வளமுறும் தரும லோகமாக
முருகா அரங்கா என்கின்ற
முழக்கம் எங்கும் கேட்கவே

8. கேட்கவே மாற்றம் தானும்
குருவருள் திருவருள் ஆகவே
திட்டமுடன் ஆற்றல் பெருகி
தெய்வநெறி கொண்ட தலைமையாக

9. ஆகவே உலகம் எங்கிலும்
ஆறுமுகனார் ஆசிபெற்ற
வகையான தலைமை பெருகி
வள்ளல்தன்மை நிறைந்த

10.நிறைந்த ஞான ஆட்சியாக
நிலவுலகம் மாற்றம் கண்டு
குறைவிலா செல்வ வளமும்
குழப்பமிலா வழிகாட்டலுமாக

11. ஆகவேச் சூழல் மாறி
அனுகிடும் சர்வபலமுமாக
மகான்களின் ஆட்சிக்காலமாக
மண்ணுலகம் சிறப்பு காண்கும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—